பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 03 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>-

1. மக்களவைத் தேர்தலுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது.

2. பிஜேபி-யின் தேர்தல் அறிக்கை குறித்து முடிவு செய்ய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் 27 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

3. ராஜஸ்தான் மாநிலத்தின் 75-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்பட்டது.

4. பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு உலக நாடுகள் கூடுதல் பாதுகாப்புப் படைகளை அனுப்ப வேண்டுமென்று பிரான்ஸ் கோரியுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

*------ இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

தமிழகம், புதுச்சேரி உட்பட 17 மாநிலங்களில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 மக்களவைத் தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும், புதுச்சேரியில் ஒரு தொகுதியிலும், ராஜஸ்தானில் 12, உத்தரப்பிரதேசத்தில் 8, மத்தியப் பிரதேசத்தில் 6, உத்தராகண்டில் 5, அஸ்ஸாம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 5 தொகுதிகள், மேற்குவங்கத்தில் 3, அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா ஆகிய மாநிலங்களில் தலா இரண்டு தொகுதிகளிலும் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

சத்தீஸ்கர், மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான் நிகோபார், ஜம்மு-கஷ்மீர், லட்சத்தீவு, ஆகியவற்றில் தலா ஒரு தொகுதிக்கும் வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

உத்தராகாண்டில் மொத்தம் உள்ள ஐந்து தொகுதிகளில் 55 வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மிசோராமில் உள்ள ஒரு தொகுதியில் ஆறு வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் முதல்கட்ட தகவலின்படி ஆயிரத்து 79 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேசமயம் சில அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கான சின்னமும் இன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியலும் இன்று வெளியிடப்படுகிறது.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் இன்று ஒரு சுயேச்சை வேட்பாளர் தமது வேட்புமனுவை திரும்பப்பெற்றதை அடுத்து, இறுதி வேட்பாளர் பட்டியலில் 26 வேட்பாளர் களத்தில் உள்ளனர்.

முதல் கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

[]<<<>>>[]

பிஜேபி-யின் தேர்தல் அறிக்கை குறித்து முடிவு செய்ய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் 27 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருமதி நிர்மலா சீதாராமன், திரு பியூஷ் கோயல் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

பீகார் மாநிலத்தில் ராம்விலாஸ் லோக் ஜன்சக்தி கட்சி போட்டியிடும் ஐந்து இடங்களுக்கான வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள இக்கட்சி பிஜேபி-யுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின், ஐந்து இடங்களில் போட்டியிடுவது இறுதி செய்யப்பட்டது,

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவி நமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற அனைவரும் முன்வர வேண்டுமென்று தெரிவித்தார்.

[]<<<>>>[]

ராஜஸ்தான் மாநிலத்தின் 75-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி இன்று மாலை ஜெய்ப்பூரில் உள்ள ஜவஹர் கலாகேந்திராவில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டுப்புற நடனங்கள் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன.

இதில் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் பங்கேற்றுள்ளனர்.

மாவட்ட தலைநகரங்களிலும் சிறப்பு கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ராஜஸ்தான் நிறுவன தினத்துக்கு குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ராஜஸ்தான் மக்களின் தொன்மை சிறப்புமிக்க விருந்தோம்பலையும், கலாச்சாரத்தையும் போற்றுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு தொழில்முனைவோரின் பங்களிப்பு மகத்தானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை ராஜஸ்தான் மாநிலம் அளிதது வருவதாகவும் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி, அம்மாநில ஆளுநர் திரு கல்ராஜ்மிஸ்ரா, முதலமைச்சர் திரு பஜன்லால் ஆகியோரும் ராஜஸ்தான் மக்களுக்கு 75-வது மாநில நிறுவன நாளையொட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

நாட்டின் மிக உயரிய பாரத ரத்னா விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில்,

முன்னாள் துணைப் பிரதமர் திரு எல் கே அத்வானி பாரத ரத்னா விருதினை குடியரசுத்தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

முன்னாள் பிரதமர்கள் சரண்சிங், பி.வி. நரசிம்மராவ், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர், பிரபல வேளாண் விஞ்ஞானி எம் எஸ் சுவாமிநாதன் ஆகியோருக்கு மறைவுக்கு பிந்தைய பாரத் ரத்னா விருது வழங்கப்பட்டது.

இந்த விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

ஏசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கிறிஸ்துவ மக்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அன்பு மற்றும் இரக்கத்தின் அடையாளமாக திகழும் ஏசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினம், தியாகம் மற்றும் மன்னிப்பின் பாதையை வெளிப்படுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

ஏசு கிறிஸ்துவின் போதனைகள் அமைதியையும், நல்லிணக்கத்தையும் வலியுறுத்துவதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பாக தில்லி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கைலாஷ் கெலாட் அமலாக்கப்பிரிவின் தலைமையகத்தில் இன்று நேரில் ஆஜரானார்.

திரு கைலாஷ் கெலாட்டுக்கு அமலாக்கப் பிரிவினரால் சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது குறித்து கருத்து தெரிவித்த ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் திருமதி அதிசி தமது கட்சியினர் மீது தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

தில்லியில் ஆம் ஆத்மி கட்சியை பிஜேபி-யால் தோற்கடிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

கோவா-வில் அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு நடத்திய போட்டிகளின்போது இந்திய மகளிர் அணியினர் பயிற்சியாளரால் தாக்கப்பட்டது குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

பாரீஸில் இந்த ஆண்டு ஜூலை 26-ஆம் தேதி தொடங்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு கூடுதல் பாதுகாப்புப் படையினரை அனுப்பி வைக்குமாறு உலக நாடுகளை பிரான்ஸ் பாதுகாப்புத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் 45 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ள நிலையில், 15 மில்லியனுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் கான்சப்ட் ஹால் தாக்குதலுக்கு

ஐ எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளதை சுட்டிக்காட்டி, பெரிய அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு கூடுதலாக பாதுகாப்பு தேவை என்றும் பிரான்ஸ் பாதுகாப்புத்துறை கூறியுள்ளது.

வெளிநாடுகள் தங்களிடம் உள்ள பாதுகாப்புப் படையினரை அனுப்பி குறிப்பிட்ட பாதுகாப்புப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்த உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

உக்ரைனுக்கு, அமெரிக்கா வழங்க தீர்மானித்துள்ள 60 பில்லியன் டாலர் ராணுவ உதவியை விரைந்து அளிக்குமாறு அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கோரிக்கையில், அமெரிக்க நாடாளுமன்றம் இதற்கான ஒப்புதலை அளித்தும் இதுவரை அந்த நிதி கிடைக்கப்பெறவில்லை என்று கூறியுள்ளார்.

இந்த ராணுவ உதவி மிகவும் அவசர தேவை என்றும், கிடைக்காத பட்சத்தில் ரஷ்யா அதி அளவு உக்ரைன் பகுதிகளை ஆக்கிரமிக்க வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்றும் திரு ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

**[]<<<>>>[]**

மேட்ரிட்டில் நடைபெற்ற ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை தோல்வியடைந்தது.

***End of News***